இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2003 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

(2003 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

2003, மே மாதம் 09 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 28.75 **தபாற் செலவு : ரூபா 9.00**

2003 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஒ. 11/2003
4741

2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(உஉஉஉ) 2002, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர், (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணைய, அல்லது திறைசேரி முறியை, அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலை, அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணையத்தைக் கையாள்வதில் ஏதேனும் இரண்டாந்தரநிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கலின்மீது, (கூட்டிணைக்கப்பட்டவொரு குழு அல்லாத, அல்லது அத்தகைய வட்டி எந்த வேறு ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு வியாபார வருமானமாக எழுகின்றதோ அல்லது திரளுகின்றதோ அந்த வேறு ஆள் அல்லது பங்குடைமை அல்லாத)

எவரேனும் ஆளுக்கு எழும் அல்லது திரளும் வட்டியும் ;

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, இரண்டாந் நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் என்பது, ஒரு பிணையத்தின் முதல்வழங்குகைக்குப் பின்னர், அத்தகைய பிணையத்தின் விற்பனையை, மீள்கொள்வனவை அல்லது எதிர் மாறான மீள்கொள்வனவற்றை உள்ளடக்கும்:".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. இரண்டாயிரத்தியோராம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் உட்பந்தி (ந) என்பதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(ந) 2002 எப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர், (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எதேனும் பிணையத்தை அல்லது திறைசேரி முறியை, அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலை அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணையத்தைக் கையாள்வதில் எதேனும் இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கலின்மீது எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் என்பது, ஒரு பிணையத்தின் முதல்வழங்குகைக்குப் பின்னர், அத்தகைய பிணையத்தின் விற்பனையை, மீள்கொள்வனவை அல்லது எதிர்மாறான மீள்கொள்வனவை உள்ளடக்கும்.".

4. (இரண்டாயிரத்திரெண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :– முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பொறுப்புமுயற்சி, வர்த்தகச் செயற்பாடுகளைக்" என்ற சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :–

"பொறுப்புமுயற்சியானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபங்களை ஈட்டத்தொடங்குகின்றதோ, அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து, அல்லது பொறுப்புமுயற்சியானது எத்தேதியிலிருந்து வர்த்தகச் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தத் தொடங்குகின்றதோ அத்தேதியிலிருந்து கணிப்பிடப்படும் இரண்டாண்டுகளுக்குப் பிந்தாத ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதாகவுள்ளதோ அதிலிருந்து கணிப்பிடப்படும் ஐந்து வருடகாலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஐநூறு மில்லியன்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இருநூற்றைம்பது மில்லியன்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் :

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :–

"(ii) "பாரம்பரியமற்ற உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதி" என்பது, 52 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பண்டங்கள் தவிர்ந்தவையும், 49 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட பண்டங்களின் கருதப்பட்ட ஏற்றுமதியை

உள்ளடக்குகின்றவையும், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய பொறுப்புமுயற்சியின் மொத்த விற்பனை வரவின் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாதவையுமான எவையேனும் பண்டங்களின் ஏற்றுமதி என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

5. (இரண்டாயிரத்தியிரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆ என்னும் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய பொறுப்புமுயற்சியில்" என்ற சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"அத்தகைய பொறுப்புமுயற்சியில், அத்தகைய கம்பெனியினால் செய்யப்பட்ட முதலீட்டுத் தொகையானது, ஆயிரம் மில்லியன் ரூபாவிலும் குறைவாகவிராதிருப்பின், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, ஆறாண்டுகளுக்குக் குறையாததும், ஆனால் பன்னிரெண்டாண்டுகளுக்கு மேற்படாததுமான காலப்பகுதி ஒன்றுக்கு, வருமான வரியிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியானது, பொறுப்புமுயற்சி எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபங்களை ஈட்டத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து, அல்லது வர்த்தகச் செயற்பாடுகளைத் தொடங்குகின்ற தேதியிலிருந்து கணிப்பிடப்படும் இரண்டாண்டுகளுக்குப் பிந்தியதான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதாகவுள்ளதோ அதிலிருந்து கணிப்பிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 21இ, 21ஈ, 21உ, 21ஊ, 21எ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 21இ, 21ஈ, 21உ, 21ஊ, 21எ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

சிறிய அளவிலான உள்ளகக் கட்டமைப்புப் பொறுப்பு முயற்சிகளுக்கு வருமானவரியிலிருந்து விலக்களித்தல்.

21இ. (1) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்படும் எதேனும் பொறுப்புமுயற்சியிலிருந்தான எதேனும் கம்பெனியின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் மூலதனச் சொத்துக்களின் விற்பனையினாலான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த, பொறுப்புமுயற்சியானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபங்களை ஈட்டத்தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அல்லது வர்த்தகச் செயற்பாடுகளைத் தொடங்குகின்ற தேதியிலிருந்து கணிப்பிடப்படும் இரண்டாண்டுகளுக்குப் பிந்தாத எதேனும் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதாக உள்ளதோ அதிலிருந்து கணிப்பிடப்படும் ஐந்து வருடகாலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு கம்பெனி தொடர்பாகக் "குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சி" என்பது, 2002 எப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் அத்தகைய கம்பெனியினால் கொண்டுநடாத்தப்படுவதும், மின்சக்தியைப் பிறப்பித்தல், உல்லாசப் பயணத்துறை, பொழுதுபோக்கு, களஞ்சியப்படுத்துதல் மற்றும் குளிர் களஞ்சியப்படுத்துகை, குப்பைகூளம் சேகரித்தல் அல்லது கையாண்டு தீர்த்தல், வீடுகளை நிர்மாணித்தல் அல்லது வைத்தியசாலைகளை நிர்மாணித்தல் என்பவற்றுக்கான உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ளதும், அத்தகைய பொறுப்பு முயற்சியைத் தொடங்கியதிலிருந்து ஓராண்டினுள் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை, பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பது மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான ஒரு பொறுப்புமுயற்சி என்று பொருளாகும்.

ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனிக்கு வருமானவரியிலிருந்து விலக்களித்தல்.

21அ. ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் ஈடுபட்டுள்ளதும் ஒரு புதிய பொறுப்புமுயற்சியைத் தொடங்கியதிலிருந்து ஓராண்டினுள் செய்யப்பட்ட இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீட்டுடன் அத்தகைய புதிய பொறுப்பு முயற்சியைத் தொடங்குகின்ற ஏதேனும் கம்பெனியின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர), பொறுப்புமுயற்சியானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபங்களை ஈட்டத்தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அல்லது வர்த்தகச் செயற்பாடுகளைத் தொடங்குகின்ற திகதியிலிருந்து கணிப்பிடப்படும் இரண்டாண்டுகளுக்குப் பிந்தாத ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதாகவுள்ளதோ அதிலிருந்து கணிப்பிடப்படும் ஐந்து வருட காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்" என்பது, அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் துறையில் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் முறைமை சார்ந்த அல்லது திறமையான ஆய்வின் பெறுபேறுகளை, உற்பத்திப்பொருட்களின் தரக்கட்டுப்பாடு அல்லது வழக்கமுறைப் பரீட்சிப்புப் பொருட்கள், உபாயங்கள், உற்பத்திப் பொருட்கள் அல்லது விளைபொருள் தவிர்ந்த பொருட்கள், உபாயங்கள், உற்பத்திப்பொருட்கள், விளைபொருள் அல்லது செயல்முறை என்பவற்றை உற்பத்தி செய்வதற்காக அல்லது சீராக்குவதற்காக, சமூக அறிவியல்களிலான அல்லது மனித அறிவியல்களிலான ஆராய்ச்சிக்காக, வழக்கமுறைத் தரவுச் சேகரிப்புக்காக, திறமை ஆய்வுகளுக்காக அல்லது முகாமைக்கற்கைகளுக்காக மற்றும் சந்தை ஆராய்ச்சிக்காக அல்லது விற்பனை மேம்பாடுத்

துறைக்காகப் பயன்படுத்தும் குறிக்கோளுடன் நிறைவேற்றப்படும் அத்தகைய ஆய்வு என்று பொருளாகும்.

செயல்நிறைவேற்றமற்ற அல்லது குறைந்த செயல்நிறைவேற்றமுடைய தொழிற் பொறுப்பு முயற்சியைக் கொள்ளுகின்ற ஏதேனும் கம்பெனிக்கு வருமானவரியிலிருந்து விலக்களித்தல்.

21உ. (1) குறித்த செயற்பாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள செயல்நிறைவேற்றமற்ற அல்லது குறைந்த செயல்நிறைவேற்றமுடைய தொழில் முயற்சியொன்றை, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட நியதிகளுக்கமையவும், அத்தகைய தொழிற்முயற்சியைக் கொள்ளும் நேரத்தில் நிலுவையாகவுள்ள நியதிச்சட்ட முறையான பொறுப்புக்களை ஈடுசெய்வதற்குப் போதிய ஏற்பாடுசெய்யப்படுவதற்கமையவும், மறுசீரமைப்பதற்கென அத்தகைய தொழில்முயற்சியைக் கொள்ளுகின்ற ஒரு கம்பெனியின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலான எவையேனும் இலாபங்கள் தவிர), 2004 மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளுதல் பூர்த்தியாக்கப்பட்டு, வர்த்தகச் செயற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளவிடத்து, மூன்று வருட காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மூன்று வருடகாலப்பகுதி, கொள்ளப்பட்ட தொழில்முயற்சி எந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து இலாபங்களை ஈட்டத்தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அல்லது அத்தகைய தொழில்முயற்சி வர்த்தகச் செயற்பாடுகளைத் தொடங்குகின்ற தேதியிலிருந்து கணிப்பிடப்படும் இரண்டாண்டுகளுக்குப் பிந்தாத ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதாகவுள்ளதோ அதிலிருந்து கணிப்பிடப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

"கொள்ளுகின்ற" என்பது, சொந்தக்காரராக, பங்காளராக அல்லது கூட்டுத்தொழில் முயற்சியாளராக வருவதன்மூலம் தொழில் முயற்சியின் சொத்தாண்மையைக் கொள்ளுதல் என்று பொருளாகும் ;

"மறுசீரமைப்பு" என்பது, நிலைபெறக்கூடிய அடிப்படையில் தொழில்முயற்சியின் வர்த்தகத் தொழிற்பாடுகளை மீளத் தொடங்குதல் என்று பொருளாகும் ;

"குறித்த துறை" என்பது, புடவைகளை உற்பத்திசெய்தல், பறவைப்பண்ணை நடாத்துதல், வேளாண்மை செய்தல், மீன் வளர்த்தல் அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் துறை என்று பொருளாகும் ;

"செயல் நிறைவேற்றமற்ற" என்பது, வர்த்தகச் செயற்பாடுகளை நிறைவேற்றத் தவறுதல் என்று பொருளாகும் ;

"குறைந்த செயல்நிறைவேற்றம்" என்பது, அடுத்தடுத்துவரும் இரு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கு, குறையாத ஒரு வரிமதிப்பீட்டு காலப்பகுதிக்குச் செயற்பாடுசார் நட்டங்களை உறுதல் என்று பொருளாகும்."

விசாலிப்பைப் பொறுப்பேற்கின்ற, ஏற்றுமதிகளுக்கான பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்களில் ஈடுபட்டுள்ள ஏதேனும்

21ஊ. (1) பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் நூறு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான ஒரு முதலீட்டுடன் பாரம்பரியமற்ற உற்பத்திப்பொருட்களை உற்பத்திசெய்வதிலும் ஏற்றுமதிசெய்வதிலும் ஈடுபட்டுள்ளதும் அத்தகைய உற்பத்திப்பொருட்களை உற்பத்திசெய்யும் பொறுப்புமுயற்சிகளின் விசாலிப்பைப் பொறுப்

கம்பெனிக்கு வருமானவரியிலிருந்து விலக்களித்தல்.

பெறுகின்றதுமான ஏதேனும் கம்பெனியின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையினாலான எவையேனும் இலாபங்கள் தவிர), அத்தகைய விசாலிப்புத் தொடர்பில் 2004, மாச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அத்திகதிக்குமுன்னர் முதலீடு முழுவதும் செய்யப்பட்டுள்ளவிடத்து இரண்டு வருட காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டு வருட காலப்பகுதியானது, விசாலிப்பில் ஈடுபட்டுள்ள பொறுப்புமுயற்சி —

(அ) பாரம்பரியமற்ற உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதியின் மீது வருமானவரியிலிருந்தான விலக்களிப்பொன்றுக்குத் தகைமையுடையதாகவிருக்குமிடத்து, அத்தகைய விலக்களிப்புக் காலப்பகுதி முடிவுறுவதற்குரிய திகதியிலிருந்து ; அல்லது

(ஆ) (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்புமுயற்சியொன்றல்லாததாகவிருக்குமிடத்து, அத்தகைய பொறுப்புமுயற்சி வர்த்தகச் செயற்பாடுகள் தொடங்குகின்ற திகதியிலிருந்து,

கணிப்பிடப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக, "பாரம்பரியமற்ற உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதி" என்பது, 52 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட பண்டங்கள் தவிர்ந்தவையும், 49 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட எவையேனும் பண்டங்களின் கருதப்பட்ட ஏற்றுமதியை உள்ளடக்குகின்றவையும், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய பொறுப்பு முயற்சியின் மொத்த விற்பனைவரவின் எண்பது சதவீதத்துக்குக் குறையாதவையுமான எவையேனும் பண்டங்களின் ஏற்றுமதி என்று பொருளாகும்.".

பாரம்பரிய ஏற்றுமதிகளில் அல்லது ஏற்றுமதி செய்யப்படற்பாலனவல்லாத பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பொறுப்பு முயற்சிகளின் விசாலிப்பிலிருந்தான இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.

21எ. (1) பாரம்பரிய ஏற்றுமதிகளின் அல்லது ஏற்றுமதி செய்யப்படற்பாலனவல்லாத பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதும், அத்தகைய பாரம்பரிய ஏற்றுமதியின் அல்லது பாரம்பரிய மற்ற பண்டங்களின் உற்பத்திக்காக அல்லது தயாரிப்பிற்காக பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீடொன்றுடன் எதேனும் பொறுப்புமுயற்சியின் விசாலிப்பைப் பொறுப்பேற்கின்றதுமான ஏதேனும் பொறுப்புமுயற்சியின் விசாலிப்பிற்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான இலாபங்களும் வருமானமும், அத்தகைய விசாலிப்பு தொடர்பிலான முழு முதலீடும் 2004 மாச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்டுள்ளவிடத்து, இரண்டு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப் பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப் படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி யானது, அப்பொறுப்பு முயற்சியின் விசாலிப்பு எந்த வரிமதிப்பீட்டாண்டில் இலாபமீட்டத் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டு அல்லது 2006 ஏப்பிறல் 1 ஆம் திகதி என்பவற்றுள் எது முந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு, "ஏதேனும் பொறுப்புமுயற்சியின் விசாலிப்பிற்கு ஏற்றிக்கூறப் படற்பாலவையான இலாபங்களும் வருமானமும்" என்பது, 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலான எவையேனும் இலாபங்களை யும் வருமானத்தையும் தவிர) அத்தகைய பொறுப்பு முயற்சியின் ஆண்டு சராசரி இலாபங்களினது விலக்களிப்பிற்குத் தகைமைபெற்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது பாரம்பரிய ஏற்று மதிகளின் அல்லது ஏற்றுமதி செய்யப்படற்பாலன அல்லாத பண்டங்களின் தயாரிப்பிலும் உற்பத்தி யிலுமிருந்தான இலாபங்களினதும் வருமானத்தின தும் மிகை என்று பொருள்படும் ; அத்தகைய சராசரி, அத்தகைய விலக்களிப்புக் காலப்பகுதி

தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டிற்கு உடன்முற் போந்த மூன்று ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கான மொத்த இலாபங்களைக் கருத்திற்கொண்டு கணிப்பிடப்படும்.

7. இரண்டாயிரத்திரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், அதன் (iii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(iii) அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும் ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் உள்ள ஊழியர்களை அவர்களின் வேலையிடத்துக்கு அல்லது அங்கிருந்து ஏற்றிச்செல்வதற்குப் பயன்படுத்தப்படுவதுமான ஏதேனும் மோட்டார் கோச்சு வாகனம், அது கொள்ளப்பட்ட செலவின் நூற்று வீதப்படி ;";

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், அதன் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ii) 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காகச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவின் நாலில் ஒன்றிற்கு.".

8. இரண்டாயிரத்திரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் "96 ஆம் பிரிவின்கீழ்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "95 ஆம் பிரிவின்கீழ்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

9. இரண்டாயிரத்திரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் —

(அ) "122அ என்னும் பிரிவின்கீழ்" என்ற சொற்களும் எண்ணும் அப்பிரிவில் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக "122அ என்னும் பிரிவின்கீழும் 122ஆ என்னும் பிரிவின்கீழும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "அமைதல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக "அமைதல் வேண்டும்:" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :—

"ஆயின், மேலும் (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தின்மீது, அல்லது திறைசேரி முறியின்மீது, அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலின்மீது அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் மத்திய வங்கிப் பிணையத்தின் மீது அல்லது ஏதேனும் முதலிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கலின் மீது 122அ என்னும் பிரிவின்கீழ் அதனிடமிருந்து வரிகழிக்கப்பட்டுள்ள ஒரு கம்பெனியாகவுள்ள அல்லது வேறுவகையாகவுள்ள எவரேனும் முதலிலை விற்பனையாளரினால் பெறப்பட்ட அல்லது அவருக்குத் திரளுகின்ற வட்டி, அத்தகைய கம்பெனியின் நியதிச் சட்டமுறையான வருமானத்தைக் கணிக்கும் நோக்கத்துக்காக 3 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் வர்த்தகத்திலிருந்தான அல்லது வியாபாரத்திலிருந்தான பெறுகைகளாகக் கொள்ளப்படுதலாகாது.";

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1ஆ) 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் எவரேனும் முதனிலை விற்பனையாளரின் வரிமதிப்பிற்குரியதான வருமானம் —

(அ) அத்தகைய வட்டியின் மொத்தத் தொகையின்மீதான வரி, விடயத்துக்கேற்ப 122அ அல்லது 122ஆ, என்னும் பிரிவின் கீழ் கழிக்கப்பட்டுள்ளவிடத்து ; அத்துடன்

(ஆ) அத்தகைய வட்டி வருமானம், விடயத்துக்கேற்ப 122அ என்னும் பிரிவில் அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் கம்பெனியொன்றினால் வழங்கப்பட்ட எதேனும் கடன் பிணையங்கள் குறிப்பீடுசெய்யப்பட்ட (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிணையங்கள் அல்லது திறைசேரிமுறிகளிலான அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலிலான முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அத்தகைய முதனிலை விற்பனையாளருக்குத் திரண்டுள்ளவிடத்து அல்லது எழுந்துள்ளவிடத்து,

பெறப்பட்ட அல்லது திரளுகின்ற ஏதேனும் வட்டி வருமானத்தை உள்ளடக்குதலாகாது.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் —

(அ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் "செலுத்தப்பட்டாலன்றி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செலுத்தப் பட்டாலன்றி;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அக்காட்டு வாசகத்தின் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(iv) செலுத்தப்படற்பாலதான தொகை, 2002 எப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற எதேனும் வரிமதிப்பீட்டாண்டில் எற்கனவே அனுமதிக்கப்பட்டிருப்பின், செலுத்தப்பட்ட எதேனும் பணத்தொகை தொடர்பில் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

10. (இரண்டாயிரத்திரெண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) முதன்மைச் சட்டவாக்கத்தில் 40ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "21அ என்னும் பிரிவின்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "21அ என்னும் பிரிவில் அல்லது 21இ என்னும் பிரிவில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "21அ என்னும் பிரிவில்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "21அ என்னும் பிரிவில் அல்லது 21இ என்னும் பிரிவில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "உலர்த்திய (தேங்காய் தவிர்ந்த)" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(தேங்காய் எண்ணெயும் உலர்த்திய தேங்காயும் தவிர்ந்த)" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, "(உலர்த்திய (தேங்காய் தவிர்ந்த)" என்னும் சொற்கள் அப்பிரிவில் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக "(தேங்காய் எண்ணெயும் உலர்த்திய (தேங்காயும் தவிர்ந்த)" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. இரண்டாயிரத்தியிரண்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(2) எதேனும் வங்கியினால், அல்லது நிதிநிறுவனத்தினால் அல்லது ஏதேனும் கம்பெனியினால் விடயத்துக்கேற்ப எவரேனுமாளுக்கு அல்லது பங்குடைமைக்குச் செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து முறையே (1) ஆம் உட்பிரிவின் அல்லது 122அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது 122ஆ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வருமானவரியைக் கழிப்பனவு செய்கின்றதும், ஏதேனும் கடன் பிணையத்தை வழங்குகின்றதுமான, அத்தகைய ஒவ்வொரு வங்கியும் அல்லது நிதிநிறுவனமும் அல்லது ஏதேனும் கம்பெனியும், பின்வரும் விபரங்களைத் தருகின்ற கூற்றொன்றை அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்குதல் வேண்டும் :—

(அ) செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட வட்டியின் முழு மொத்தத்தொகை ;

(ஆ) வரித்தொகையின் வீதமும் ; கழிப்பனவு செய்யப்பட்ட தொகையும்

(இ) உண்மையாகச் செலுத்தப்பட்ட தேறிய தொகை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவு இத்தால் நீக்கம்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :

"வங்கி அல்லது நிதி நிறுவனம், செலுத்தப்பட்ட வட்டி மீதான வருமான வரியைக் கழித்தல்.

122அ. (1) வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக —

(அ) எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையால் அவரது அல்லது அதன் சொந்தப் பெயரில் அல்லது எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும்

பங்குடைமையின் பெயர் எதுவுமின்றி (420 ஆம் அத்தியாயமான பதிவுசெய்யப் பட்ட பங்குத்தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தை அல்லது திறைசேரி உண்டியலை அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் திறைசேரி உண்டியல் அல்லது (422 ஆம் அத்தியாய மான) பணச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் மத்திய வங்கிப் பிணையத்தைத் திறைசேரி உண்டியலைத் தவிர

அதனுடன் வைப்பீடு செய்யப்படும் ஏதேனும் பணத்தொகையின்மீது வட்டி செலுத்தப்படும் நேரத்தில் அல்லது வரவுவைக்கப்படும் நேரத்தில் —

(i) 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2003 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய வைப்பீட்டின்மீது மாதமொன்றுக்கு ஆறாயிரம் ரூபாவுக்குக் குறையாது அல்லது பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு எழுத்திரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாது செலுத்தப்படற்பாலதான வட்டி ;

(ii) 2003 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான அத்தகைய வைப்பீட்டின்மீது மாதமொன்றுக்கு ஒன்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாது அல்லது பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு ஒரு இலட்சத்து எண்ணாயிரம் ரூபாவுக்குக் குறையாது செலுத்தப்படற்பாலதான வட்டியின்மீது ;

அத்தகைய வைப்பீட்டின்மீது செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்ட வட்டியின் மொத்தத்தொகையில் பத்துச் சதவீதம் என்ற வீதத்தில் வருமானவரியை, அதைச் செலுத்தும் போது கழித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், தரும நிறுவனமொன்றாக ஆணையாளர் தலைமையதிபதியால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய நிறுவனத்தால் வைத்திருக்கப்படும் எல்லா வைப்பீடுகள்மீதும் அல்லது கணக்குகள்மீதும் அத்தகைய நிறுவனத்தின்மீது செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்டவையும் மாதமொன்றுக்கு பன்னிரண்டாயிரம் ரூபாவை அல்லது ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாததுமான ஏதேனும் வட்டி மற்றும் தள்ளுபடி என்பனமீது ஏற்புடையனவாகா :

ஆயின், மேலும், ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்று அத்தகைய ஆளினால் அல்லது பங்குடைமையால் அத்தகைய வங்கியுடன் அல்லது நிதிநிறுவனத்துடன் வைப்பீடு செய்யப்பட்ட பணத்தொகையொன்றின்மீது அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்குச் செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து பத்துச் சதவீதம் என்ற வீதப்படி வருமானவரியைக் கழிக்குமாறு வங்கியொன்றுக்கு அல்லது நிதிநிறுவனமொன்றுக்கு எழுத்துமூலம் வேண்டுகோள் விடுக்குமிடத்து, அப்போது செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக்கப்பட்ட வட்டியினதும் தள்ளுபடியினதும் தொகை முற்போந்த ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட தொகைகளை விஞ்சாதபோதிலும்கூட அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரிக் கழிப்பனவு 122அ என்னும் பிரிவின் கீழான கழிப்பனவொன்றாதலும் வேண்டும் ;

(ஆ) எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் அவரது அல்லது அதன் சொந்தப்பெயரில் அல்லது எவரேனும் ஆளின் அல்லது பங்குடைமையின் பெயரின்றி (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள், மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையில் அல்லது திறைசேரிமுறியில் அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலில் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கி பிணையத்தில் வைப்பீடுசெய்யப்படுவதாகியதும் அத்தகைய பிணையத்தின், முறியின் அல்லது உண்டியலின் காலப் பகுதிக்கு அதன்மீது ஏதேனும் தள்ளுபடி அனுமதிக்கப்படுவதும் வட்டி செலுத்தப் படுவதும் அல்லது செலுத்தப்படற்பாலது மான ஏதேனும் பிணையத்தில் அல்லது திறைசேரி முறியில், வைப்பீடுசெய்யப் படும் ஏதேனும் பணத்தொகையின்மீது, 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட பிணையத்தை, முறியை அல்லது உண்டியலைத் தவிர அத்தகைய பிணையம், முறி அல்லது உண்டியல் வழங்கப்படும் நேரத்தில், விடயத்துக்கேற்ப, அத்தகைய பிணையத்தின், அல்லது முறியின் அல்லது உண்டியலின் காலப்பகுதிக்கு முதிர்ச்சி விளைவின்படி கணிப்பிடப்பட்ட மொத்தத் தொகையின்மீது பத்துச்சத வீதப்படி வருமானவரியை, அதனைச் செலுத்தும்போது கழித்தல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கத்திற்காக (420 ஆம் அத்தியாயமான) "பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையம் அல்லது திறைசேரி முறி அல்லது (417 ஆம் அத்தியாய மான) உள்ளூர் திறைசேரி முறிகள் கட்டளைச்

சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சபைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணையம் வழங்கப்பட்ட நேரத்தில் அதன் முதிர்ச்சி விளைபயன்" என்பது, அத்தகைய பிணையத்தின், முறியின் அல்லது உண்டியலின் சமப்பெறுமதிக்கு மிக மதிப்பாகவோ அல்லது தள்ளுபடியாகவோ இருக்கக் கூடிய வழங்கீட்டு விலையையும், வட்டிச் சீட்டுக்களையும் வட்டிச் சீட்டுகள் வழங்கப்படும் கால இடைவெளியையும் காலநிர்ணயத்தையும் கருத்திற் கொண்டு வழங்கப்படும் நேரத்திலான வட்டி என்று பொருள்படும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எதேனும் சேமிப்புச் சான்றிதழின், வைப்புச் சான்றிதழின் அல்லது அதனையொத்த சாதனங்களின் அல்லது அரசாங்க ஈடபாக்கடன்களின் அல்லது எவரேனும் தனியாளின் பெயரில் அல்லது வேறு எவரேனும் தனியாளுடன் கூட்டாக அல்லது ஆணையாளர் தலைமையதிபதியால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட எதேனும் தரும நிறுவனத்தின் பெயரில் அல்லாத எதேனும் வைப்பீட்டின் விடயத்தில், அத்தகைய தள்ளுபடியின் அல்லது வட்டியின் தொகையைப் பொருட்படுத்தாமல், அனுமதிக்கப்பட்ட தள்ளுபடியினதும் செலுத்தப்பட்ட வட்டியினதும் மொத்தத் தொகையின்மீது வரி கழிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் வரிக்கழிப்பனவொன்றின் நோக்கங்களுக்காக —

(அ) "வைப்பீடு செய்யப்பட்ட பணத்தொகையொன்று" என்பது, எதேனும் வட்டியை உழைக்கும் வைப்பீடு, எதேனும் விதமான சேமிப்புச் சான்றிதழ் அல்லது வைப்புச் சான்றிதழ், அல்லது (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்

தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எதேனும் பிணையம் அல்லது திறைசேரிமுறி அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிணையம் என்று பொருள்படும் ;

(ஆ) பணத்தொகையொன்றின் வைப்பீட்டின்று தொடர்பில் "வட்டி" என்பது, எந்த ஆளின் அல்லது பங்குடைமையின் பெயரில் அல்லது எந்த ஆளின் அல்லது பங்குடைமையின் சார்பில் பணம் வைப்பிடு செய்யப்படுகின்றதோ அந்த ஆளின் அல்லது அவரது அல்லது அதன் சார்பில் வேறு எவரேனும் ஆளின் நலனுக்குத் திரளும் வட்டியை, தள்ளுபடியை, எதேனும் உத்தரவாதமளிக்கப்பட்ட வருமானத்தை அல்லது உறுதிப் படுத்தப்பட்ட கட்டணத்தை அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவை உள்ளடக்கும் : ஆனால் 10 ஆம் பிரிவின்கீழ் விலக்களிக்கப் பட்ட எதேனும் வட்டியை, அல்லது அமைச்சரவையின் அமைச்சர் ஒருவரின் எதேனும் அமைச்சுக்கு, அல்லது இலங்கை அரசாங்கத்தின் திணைக் களத்திற்கு, அல்லது எதேனும் உள்ளூராட்சி மன்றத்திற்கு அல்லது மாகாண சபை யொன்றின் கீழுள்ள எதேனும் நிறுவனத் திற்கு அல்லது எதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திற்கு அல்லது இச்சட்டத்தின் 8(அ) என்னும் பிரிவின்கீழ் அத்தகைய வட்டி வருமானத்திலிருந்து விலக்களிக் கப்பட்ட எவரேனும் ஆளுக்கு உரிய எதேனும் வட்டியை உள்ளடக்கமாட்டாது.

(இ) அனுமதிக்கப்படும் தள்ளுபடி யொன்றின் விடயத்தில் தள்ளுபடியின் தொகைக்குச் சமமான வட்டியானது, அத்தகைய தள்ளுபடி அனுமதிக்கப்படும் நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஓர் உண்டியலின் அல்லது முறியின் அல்லது பிணையத்தின் காலப்பகுதிக்கு வட்டிக்கொடுப்பனவு கூறுடனான அத்தகைய உண்டியல் அல்லது முறி அல்லது பிணையம் ஒன்றின் விடயத்தில் வட்டியானது முதிர்ச்சி விளைபயன் ஆதல் வேண்டும் : இத்தொகை அத்தகைய உண்டியல் அல்லது முறி அல்லது பிணையம் வழங்கப்பட்ட நேரத்தில் செலுத்தப் பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சந்தேகத்தைத் தவிர்ப்பதற்கு, (1) ஆம் உட்பிரிவில் "வட்டி செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக் கப்பட்ட நேரத்தில் கழித்தல்" என்பது, வைப் பீட்டாளரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்ட எதேனும் வட்டித் தொகையை உள்ளடக்குதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 122ஆ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :

வட்டியிணைப்புத் தவிர்கடப் பிணையம் வழங்கும் கம்பெனி யொன்று வட்டியின்பாலான வருமான வரியைக் கழித்தல்.

122ஆ. (1) வட்டியிணைப்பு கடன் பிணையத்தை வழங்கும் ஏதேனும் கம்பெனி இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கொடுப்பனவின் நேரத்தில், அத்தகைய கடன் பிணையத்திற்கு, எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் ஒப்பளிக் கப்படும் ஏதேனும் பணத்தொகையின்று, அத்தகைய ஒப்பளிப்பு 2002 நவெம்பர் 1 ஆம் திகதிக்கு முன்னர் செய்யப்பட்டிருப்பினுஞ்சரி

அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்யப்பட்டிருப்பினுஞ்சரி, அத்தகைய கொடுப்பனவு 2002 நவெம்பர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இடம்பெறுமிடத்து அத்தகைய கடன் பிணையத்தின்மீது திரண்டதும் செலுத்தப்பட்டதுமான அல்லது வரவு வைக்கப்பட்டதுமான வட்டித்தொகையின் மொத்தத்தின் பத்துச் சதவீதத்தின் வீதப்படி வருமான வரியைக் கழித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் கூட்டிணைப்புக் கடன் பிணையமொன்றின் சமப் பெறுமதியின் ஐம்பது சதவீதத்தை விஞ்சிய தள்ளுபடியொன்றில் வழங்கப்பட்ட எதேனும் அத்தகைய பிணையம் இப்பிரிவின்கீழ் வரிக்கழிப்பனவுக்கு அமைவனவாதல் ஆகாது. அத்தகைய பிணையத்திலிருந்து அல்லது அது தொடர்பில் எழும் எதேனும் வட்டி அல்லது வேறு வருமானம், இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய பிணையத்தை ஈடுபடுத்தும் எதேனும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல் வாங்கல் உட்பட பத்துச்சதவீத வீதப்படி வரி விதிக்கப்பாடற்பாலதாதல் வேண்டும்.

(2) அத்தகைய கடன் பிணையத்தின்மீது 2002 நவெம்பர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எதேனும் தள்ளுபடி அனுமதிக்கப்படுமிடத்து அல்லது வேறு எதேனும் உத்தரவாத மளிக்கப்பட்ட வருமானம் செலுத்தப்படுமிடத்து, அத்தகைய தள்ளுபடி அல்லது வருமானம், செலுத்தப்பட்ட வட்டியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வருமான வரிக் கழிப்பனவுக்கு ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

(அ) "கூட்டிணைப்புக் கடன் பிணையம்" என்பது —

(i) பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகிய ; அல்லது

(ii) எந்தக் கம்பெனியின் பிணையம் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனியொன்றாகிய ;

(iii) அத்தகைய எந்தக் கம்பெனிக்கான செலுத்தும் முகவர் —

(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாக அல்லது அதன் நிதிச் சேவைகள் துணை நிலையாக ; அல்லது

(ஆ) உரிமம்பெற்ற விசேட வங்கியாக அல்லது அதன் நிதிச் சேவைகள் துணை நிலையாக ; அல்லது,

(இ) வங்கியொன்றல்லாத நிதி நிறுவகமாக,

இருக்கின்றதோ அந்தக் கம்பெனியொன்றாகிய

ஏதேனும் கம்பெனியால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் பிணையம் என்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய பிணையமானது, அதனை வைத்திருப்பவருக்கு கோரிக்கையின் மீது அல்லது அதன் காலப்பகுதியின்போது அல்லது முதிர்ச்சியில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையொன்றைச் செலுத்துமாறு அத்தகைய பிணையத்தை வழங்கும் கம்பெனிக்கு கடப்பாடொன்றை விதிக்கும் முறிகளையும் பத்திரங்களையும் ஈடுகளையும் வேறு ஏதேனும் விதமான சாதனத்தை அல்லது பத்திரத்தை உள்ளடக்கும் வட்டியை அல்லது தள்ளுபடியை வழங்கும் கடன் சாதனமாதலும் வேண்டும்.

(ஆ) கடன் பிணையம் வங்கியொன்றினால் அல்லது நிதிநிறுவனமொன்றினால் தொழிலொன்றைக் கொண்டு நடாத்தும் போது வழங்கப்பட்ட எவையேனும் கடன்களை, முற்பணங்களை, மேலதிகப்பற்றை அல்லது இதனையொத்த வேறு கடன் வசதியை அல்லது நிதிச் சாதனத்தை உள்ளடக்குதல் ஆகாது.

சந்தேகத்தைத் தவிர்ப்பதற்கு, (1) ஆம் உட்பிரிவில் "செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து வருமான வட்டியிலிருந்து வருமான வரியை, அதைச் செலுத்தும் போது கழித்தல் வேண்டும்." என்பது, ஒப்பப்பணம் செலுத்துநரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் எதேனும் வட்டித் தொகையை உள்ளடக்குதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "122 என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுப்பனவொன்றை" என்னும் எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "122 என்னும் பிரிவில், 122அ என்னும் பிரிவில் அல்லது 122ஆ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வட்டிக் கொடுப்பனவொன்றை" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "122 என்னும் பிரிவின்கீழ்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "122 என்னும் பிரிவின்கீழ், 122அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்,

(அ) "123 என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "122 என்னும் பிரிவின்கீழ், 122அ என்னும்

பிரிவின்கீழ் அல்லது 122ஆ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) "உரித்துடையவராதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரித்துடையவராதல் வேண்டும் :" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

ஆயின், எவ்வாறாயினும், எந்த மொத்த வருமானத்தின்மீது 122அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் வரி கழிக்கப்பட்டுள்ளதோ அந்த வருமானம், ஒரு வரிமதிப்பீட்டாண்டிற்கு மேலாக திரளுகின்றவிடத்தும் அத்துடன் எதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தைக் கணிப்பிடுகையில் முழுமையாக உள்ளடக்கப்பட்டிராதவிடத்தும் அப்போது அவ்வாறு கழிக்கப்பட்ட, அந்த ஆண்டில் அல்லது அடுத்துறும் எதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளின் வரிமதிப்பீடு செய்யப்படற்பாலதான வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட வருமானத்திற்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வரியின் விகிதாசாரத் தொகைக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 123அ, 123ஆ என்னும் பிரிவுகள் என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 123அ, 123ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்மீது புனையப்பட்ட வரி வரவு.

123அ. ஆளெவரும் 122அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட (420) ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தை அல்லது திறைசேரி முறியை அல்லது (417 ஆம் அத்தியாயமான)

உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களை அல்லது (422 ஆம் அத்தியாயமான பணச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணையத்தை ஈடுபடுத்தும், அதன்மீது அத்தகைய பிணையம், முறி அல்லது உண்டியல் வழங்கப்பட்ட நேரத்தில் அல்லது அத்தகைய பிணையம், முறி அல்லது உண்டியல் 2002 எப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளவிடத்து பத்துச் சதவீதத்தின் வீதப்படி எதேனும் வரிமதிப்பீட்டாண்டில் வருமானவரி கழிக்கப்பட்டுள்ளதுமான எதேனும் இரண்டாம் நிலை சந்தைக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய இரண்டாம்நிலை சந்தைக் கொடுக்கல் வாங்கலிலிருந்து, அத்தகைய வட்டி வருமானம் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் ஒரு பாகமாக அமையுமாயின் வட்டி வருமானத்தின் கூட்டுமொத்தத் தொகையின் பத்துச் சதவீதப்படி புனையப்பட்ட வரி வரவொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "இரண்டாம் நிலை சந்தைக் கொடுக்கலிலிருந்து வட்டி வருமானம்" என்பது இச்சட்டத்தின் 99 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரால் சான்றுபடுத்தப்பட்டுள்ள அத்தகைய வட்டி வருமானம் எந்தப் பிணையங்களில், திறைசேரி முறிகளில் அல்லது திறைசேரி உண்டியல்களிலிருந்து ஈட்டப்பட்டதோ அந்தப் பிணையங்களுடனான திறைசேரி முறிகளுடனான அல்லது திறைசேரி உண்டியல்களுடனான மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான வட்டிச் செலவுகளைக் கழித்து மொத்த வட்டி வருமானம் என்று பொருள்படும்.".

பிடித்து வைத்து வரித்துப் பொறுப்பான வட்டியின்மீது செலுத்தப்பட்ட வருமான வரியின் மீளளிப்பு.

123ஆ. ஆளெவரும், தாம் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் வருமானவரிக்கு அமைந்துள்ளதான ஏதேனும் வட்டியின்மீது 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் பத்துச் சதவீதப்படி ஏற்கனவே வருமானவரியைச் செலுத்தியுள்ளார் என அத்தகைய ஆள் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பித்துள்ளவிடத்து, அத்தகைய ஆள் 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் கழிக்கப்பட்ட வருமான வரியைத் தவிர அத்தகைய வட்டி வருமானத்தின்மீது அவரால் செலுத்தப்பட்ட அத்தகைய வருமான வரியின் மீளளிப்பொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 124அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 124அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் கழிப்பனவுகள் செய்யப்படுமிடத்து பணிப்புரைகள் வழங்குதல்.

124அ. (1) எந்த ஆளின் அல்லது பங்குடைமையின் வட்டி வருமானத்திலிருந்து, விடயத்திற்கேற்ப 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒரு வங்கியால், நிதி நிறுவனத்தால் அல்லது கூட்டிணைப்புக் கடன் பிணையங்கள் வழங்கும் ஏதேனும் கம்பெனியால் வருமானவரி கழிக்கப்படற்பாலதாகின்றதோ விடயத்திற்கேற்ப, அந்த ஆளின் வரிமதிப்பிடப்படற்பாலதான வருமானமாக அல்லது அந்தப் பங்குடைமையின் பிரிபடற்பாலதான இலாபமாக அல்லது வருமானமாக, அத்தகைய வட்டி வருமானம் அமையுமிடத்து, அத்தகைய ஆள் அல்லது அத்தகைய பங்குடைமை, அவரால் அல்லது இயைபான பங்காளர்களால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் தொகை 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் அந்த வரிமதிப்பீட்டாண்டில் கழிக்கப்படற்பாலதான வருமான வரியை விடக் குறைவாக இருப்பின்,

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமான வரியின் கழிப்பனவில் அவசியமான சீராக்கங்களைச் செய்யுமாறு அவ்வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு அல்லது கூட்டிணைப்புக் கடன் பிணையங்களை வழங்கும் எதேனும் கம்பெனிக்கு பணிப்புரையொன்று வழங்கப்படவேண்டுமென ஆணையாளர் தலைமையதிபதிக்கு, ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில், அத்தகைய விபரங்கள் அடங்கிய விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) பிரிவு 124 என்பதன் உட்பிரிவு (2), உட்பிரிவு (3), மற்றும் உட்பிரிவு (4) என்பவற்றின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரை தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் தொடர்புடையனவாதல் வேண்டும்.

(3) ஆயின், 29 ஆம் பிரிவின்கீழ் கழிக்கப்பட்டதாலதான வருமான வரியின் அத்தகைய மிகைக் கழிப்பனவு, அத்தகைய ஆளினால் அல்லது பங்குடைமையால் உறப்பட்ட நட்டங்களின் பெறுபேறொன்றாக எழுந்ததாலென்றியும், அத்துடன் அத்தகைய நட்டங்களின் தொகையானது இயைபான வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்தில் வருமான வரிக் கழிப்பனவுக்கு அமைவான இயைபான மதிப்பிடப்பட்ட வட்டி வருமானம், அல்லது 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ் வருமான வரிக்கு அமைவான அத்தகைய வட்டி வருமானம் புறந்நீங்கலாக, முற்போந்த ஆண்டின் அடிப்படையில் அவ்வாண்டிற்கு மதிப்பிடப்பட்ட மொத்த நியதிச்சட்ட வருமானத்தை விஞ்சினாலென்றியும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டாலென்றியும் ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின் (1) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பணிப்புரையொன்றை வழங்குதலாகாது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 125அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் : — முதன்மைச் சட்டவாக்கத்தில் 125அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"வரியைத் தவிர்ப்பதற்கான தண்டனை.

125.அ. ஏதேனும் கடன் பிணையத்தை வழங்கும் ஏதேனும் வங்கி அல்லது தனிசுப் பிணையம் நிதி நிறுவனம் அல்லது கூட்டிணைப்புக் கடன் பிணையம் வழங்கும் ஒரு கம்பெனி விடயத்திற்கேற்ப, 125.அ அல்லது 122ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வரிக்கழிப்பனவைச் செய்யவில்லை என ஆணையாளர் தலைமையதிபதி கருதுமிடத்து, அவர், அத்தகைய வங்கிக்கு, நிதி நிறுவனத்திற்கு அல்லது கடன் பிணையம் வழங்கும் எதேனும் அத்தகைய கம்பெனிக்கு காரணம் காண்பிக்கும் சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர், விடயத்திற்கேற்ப 122.அ அல்லது 122ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையொன்று இடம்பெற்றுள்ளது என அவர் திருப்தியுறுமிடத்து அத்தகைய பிரிவுகளின் ஏற்பாடுகளின் மீறுகையால் தவிர்க்கப்பட்ட வரியின் ஐந்நூறு சதவீதத்திற்குச் சமமானவொரு தொகையின் தண்டப்பணமொன்றை அத்தகைய வங்கியின்மீது அல்லது நிதி நிறுவனத்தின்மீது அல்லது அத்தகைய கடன் பிணையத்தை வழங்கும் கம்பெனியின்மீது விதிக்கலாம்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :

"(2) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ளது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டப்பணம் 2002 நவெம்பர் 6 ஆம் திகதியன்று நிலுவையிலிருக்குமிடத்து, —

(அ) தவணை தவறுகையிலுள்ள வரி, 2002 நவெம்பர் 6 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முற்றாகச் செலுத்தப்பட்டுள்ளவிடத்து அத்தகைய தண்டப்பணம் முற்றாக விட்டு விடப்படுதல் வேண்டும் ;

(ஆ) தவணை தவறுகையிலுள்ள வரியின் பாகமொன்று 2002 நவெம்பர் 6 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, தவணை தவறுகையிலுள்ள வரித்தொகைக்குக் குறிப்பிடத்தக்க அவ்வாறு செலுத்தப்பட்ட தண்டப்பணம் விட்டு விடப்படுதல் வேண்டும்.:

முதன்மைச் சட்டவாக்கத்தில் 130அ, 130ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 130அ மற்றும் 130ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

"வருமானவரி அறவிடப்படற்பாலதாக ஆள் அல்லது பங்குடமை.

130அ. ஏதேனும் வரி 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் ஆளிடமிருந்து அல்லது பங்குடைமையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை வருமானவரி விதிக்கப்படற்பாலதான ஆளொருவராக அல்லது பங்குடைமையொன்றாக இருத்தல் வேண்டும்.

பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பங்குடைமையாகக் கருதப்படுதல் வேண்டும்.

130ஆ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் பங்குடைமையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. 2002 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :

(1) "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில்,

(அ) அவ்வரைவிலக்கணத்தின் 1(அ) என்னும் விடயத்தில் (iii) என்னும் துணை விடயத்தில் "சட்டத்தரணியொருவராக ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்தரணியொருவராக :" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(ஆ) அந்த வரைவிலக்கணத்தின் 1(அ) என்னும் விடயத்தின் (i) என்னும் துணை விடயத்தில் "ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஊழியர் ஒருவராக", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஊழியத்துக்கமர்த்தப்பட்ட ஊழியர் ஒருவராக ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) விடயம் 1(அ) என்பதன் துணை விடயம் (iv) என்பதனை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :

"(v) "2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரியிறுப்பனவு நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வரியிறுப்பனவு நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக :";

(2) "விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :

"முதனிலை வியாபாரி" என்பது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது (420 ஆம்

அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் இலங்கை பிணைச் சபையால் நியமிக்கப்பட்டதும் திறைசேரி உண்டியல்களில், திறைசேரி முறிகளில் பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளில் அல்லது வேறு பிணையத்தில் ஒரு முதனிலை வியாபாரியாகப் பணியாற்றுவதுமான ஏதேனும் நிதியாளர் அல்லது வங்கி என்று பொருள்படும் :

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை, அவ்வட்டவணையின் (12) ஆம் விடயத்தில் "பிரிவு 23(1)" என்னும் சொல்லுக்கும் இலக்கத்துக்கும் எழுத்துக்கும் பதிலாக, "பிரிவு 23(1)" என்னும் சொல்லையும் இலக்கங்களையும் எழுத்தையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

24. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 10, 15, 21அ, 21ஆ, 23, 29, 40ஆ, 122, 122அ, 123, மற்றும் 186 என்பவற்றிற்கு இச்சட்டத்தின் பிரிவுகள் 2, 3, 4, 5, 9(1)(ஆ), (இ), 9(2), 9(3), 10, 13, 14, 16, மற்றும் 22 என்பவற்றால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 எப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தில் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவால் 21ஈ, 21உ மற்றும் 21எ என்னும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்பட்ட எல்லா நோக்கங்களுக்காகவும் 2003 எப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம், 24 ஆம் பிரிவுகளுக்கும் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணைக்கும் இச்சட்டத்தின் பிரிவு 7(2), 8, அத்துடன் பிரிவு 23 என்பவற்றால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2000 எப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 9(1)(அ) என்னும் பிரிவால் செய்யப்பட்ட திருத்தமும்,

(ஆ) இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தில் உட்புகுத்தப்பட்ட 122ஆ, என்னும் புதிய பிரிவு

எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 நவெம்பர் 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம், 50 ஆம் பிரிவுகளுக்கு இச்சட்டத்தின் 11 ஆம், 12 ஆம் பிரிவுகளால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2003 சனவரி 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 நவெம்பர் 6 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

(அ) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்ட வாக்கத்தில் 21ஆ என்னும் பிரிவு எல்லா நோக்கங்களுக்காகவும், 2002 ஒற்றோபர், 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் பிரிவுகள் 6, 17, 18, 19 மற்றும் 21 என்பவற்றால் முறையே உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தில் பிரிவுகள் 21இ, 123அ, 123ஆ, 124அ, 125அ, 130அ, 130ஆ என்பன உட்புகுத்தப்பட்டமையானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 எப்பிறல் 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

25. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் வீதி, கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.